**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SPECIAL DISTRICT JUDGE FOR MCOP CASES, MADURAI.**

**MCOP No.2495/2024** : **PW2**

Name : திரு. முத்துவேல்

Father's Name :

Taluk :

Caste :
Calling :
Religion :
Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of July 2026.**

-------

முதல் விசாரணை

நான் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அதை சாட்சியத்தின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டுகிறேன்.

| வ. எண் | நாள் | ஆவணம் | குறிப்பு |
|---|---|---|---|
| ம.சா.ஆ.20 | | என்னுடைய ஆதார் அடையாள அட்டை | நகல் |

**குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்தவரை எனக்குத் தெரியாது. விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. குற்ற பத்திரிக்கையில் என்னுடைய பெயர் இடம்பெற்றுள்ளது. சம்பவம் நடந்த நேரம் இரவு 7.00 மணியிலிருந்து 7.30 மணிக்குள் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ஏர்போர்ட்டில் இருந்து மதுரை செல்லும் ரோடாகும். சம்பவ இடத்திற்கு அருகே இளநீர் கடை, மீனாட்சி வேர்ஹவுஸ், ஜெயவிலாஸ் பெட்ரோல் பங்க் இருந்தது

என்றால் சரிதான். இறந்த போன நபர் ரோட்டை கடக்கும் போது சாலையின் இருபுறமும் பார்க்காமல் திடீரென கடந்ததால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் சரியான திசையில் சாலை விதிகளை மதித்து ஆட்டோவை ஓட்டிச் சென்றார் என்றும், விபத்தில் இறந்தவர் திடீரென ரோட்டை கடந்ததால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்தவரின் கவனக்குறைவு காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

N NAGALAKSHMI

Digitally signed by N NAGALAKSHMI
Date: 2026.07.10 19:27:18 +0530